பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 22 ஞாயிற்றுக்கிழமை 07.09.2025 கதிர் 301

## இது ரகசியம் அல்ல!

தெற்கில் இப்போது பரபரப்பான பேசு பொருள் பாதாள உலகக் குழுவினரின் கைதும் அதைத் தொடர்ந்து ‘ஐஸ்’ போதைப் பொருள் உற்பத்தி மையம் ☞ 2

# சர்வாதிகார ஒரு கட்சி ஆட்சியை நோக்கி நகர்கிறது ஆளும்தரப்பு

## முன்னாள் எம்.பி. தொலவத்த தெரிவிப்பு

தேசிய மக்கள் சக்தி ஆளும் தரப்பு சர்வாதிகார ஒரு கட்சி ஆட்சி முறைமையை நோக்கியே நகர்கின்றது என்பது தெளிவாகத் தெரிகிறது. சமூக வலைத் தளமற்றும் அரசியல் செயற்பாட்டாளர்களான மிலிந்த ராஜபக்ச மற்றும் எராஜ் ஆகியோருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை மற்றும் முன்னிலை சோசலிசக் கட்சி அலுவலகத்திலிருந்தோர் தாக்கப்பட்டமை தொடர்பில் பொலிஸாரின்மௌனம்இதற்குச் சிறந்த உதாரணமாகுமென முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்பிரேம்நாத்தொலவத்த தெரிவித்தார்.

கொழும்பில் சனிக்கிழமை செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசியமக்கள்சக்திஆளும்தரப்பு சர்வாதிகார ஒரு கட்சி ஆட்சி முறைமையை நோக்கியே நகர்கின்றது என்பது தெளிவாகத் தெரிகிறது.அதன்பிரதிபலனாகவே மிலிந்த ராஜபக்ச மற்றும் எராஜ் ஆகியோருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானசம்பவங்கள் ☞ 2

# ஜெனிவா கூட்டத்தொடர் நாளை தொடங்குகிறது

## முதல் நாளிலேயே இலங்கை குறித்த அறிக்கை

ஐக்கியநாடுகள்மனித உரிமைகள்பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் நாளை திங்கட்கிழமை (8) ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ள நிலையில், அன்றைய தினமே ஐ.நா மனித உரிமைகள் உயராணையரின்இலங்கைதொடர்பானஎழுத்துமூல அறிக்கை பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஜெனீவாவில்நாளையதினம்உள்ளூர்நேரப்படி காலை 10.00 மணிக்கு (இலங்கை நேரப்படி பி.ப 1.30) ஆரம்பமாகவிருக்கும் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரின் முதலாம் நாள் அமர்வில் உலகளாவிய மனித உரிமைகள் நிலைவரம் குறித்து ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் உரையாற்றுவார்.

அதனைத்தொடர்ந்து மியன்மார் தொடர்பான உயராணையரின் அறிக்கை மற்றும் சுயாதீன விசாரணைப்பொறிமுறை குறித்த விவாதம் நடைபெறும்.

அதன் பின்னர் ஜெனீவா நேரப்படி நண்பகல் 12.15 மணிக்கு (இலங்கை நேரப்படி பி.ப 3.45) ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான அறிக்கை மீதான விவாதம் இடம்பெறும்.

‘இலங்கையில் ஆட்சிபீடமேறிய அரசாங்கங்கள் சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு ஏற்றவாறு அமையக்கூடிய சுயாதீனமானதும், நியாயமானதும், செயற்திறன்மிக்கதுமான பொறுப்புக்கூறல்செயன்முறையைஸ்தாபிப்பதற்குத் தற்போதுவரை தவறியிருக்கின்றன. இந்நிலையில் உண்மை, நீதிமற்றும்பொறுப்புக்கூறல்என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு பாதிக்கப்பட்ட தரப்பினரதும், சர்வதேசசமூகத்தினதும்நம்பிக்கையைவென்றெடுத்த முன்னேற்றகரமானதொருசெயன்முறையைநோக்கி ஆளும்தரப்பு நகரவேண்டும்‘ என உயர்ஸ்தானிகர் அலுவலக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வறிக்கை தொடர்பில் உறுப்புநாடுகளின் பிரதிநிதிகள் தமது கருத்துக்களை முன்வைத்து உரையாற்றியதன் பின்னர், இலங்கை சார்பில் கூட்டத்தொடரில் பங்கேற்றவுள்ள வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் ☞ 6

# மாணவி கிருஷாந்தி படுகொலையின் 29ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று

1996 ஆம் ஆண்டு சந்திரிகா ஆளும்தரப்பின் காலத்தில், இராணுவத்தினரால்கைதுசெய்யப்பட்டு கூட்டுப் பாலியல் வன்முறைவுக்கு உட்படுத்தப்பட்டுப்படுகொலைசெய்யப் பட்ட சுண்டுக்குளி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி கிருசாந்தி குமாரசுவாமியின் 29ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு செம்மணி அணையா விளக்குத் திடலில் நடைபெறவுள்ளது.

நினைவேந்தல்ஏற்பாட்டுக்குழுவின் ஒருங்கிணைப்பில் நடைபெறும் இந்நிகழ்வில் காலை 9 மணிக்கு நினைவுச் சுடரேற்றல் மற்றும் மலர்வணக்கம் நடைபெற்று 9.30க்கு நினைவுப் பகிர்வு முன்னெடுக்கப்படவுள்ளது.

10 மணிக்கு ‘வாசலிலே கிருசாந்தி’ என்ற கவிதைத் தொகுப்பு வெளியீடு செய்யப்படவுள்ளதோடு 10.30க்கு ஆவண காட்சிப்படுத்தல் நடைபெறவுள்ளது

# ஷஷீந்திர சிறை வைத்தியசாலையில்

அரகலய போராட்டத்தின் போது தமதுசொத்துக்கள்சேதமாக்கப்பட்டதாக தெரிவித்து88இலட்சம்ரூபாவிற்குமேல் நட்டஈடு பெற்றமை தொடர்பாக இலஞ்ச ஊழல்விசாரணைஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் இராஜாங்கஅமைச்சர்ஷஷீந்திரராஜபக்ச சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மருத்துவஆலோசனைக்குஅமைய நேற்றுமுன்தினம் பிற்பகல் அவர் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்க நடவடிக்கை ☞ 6

# சஜித் - ரணில் இணைந்தால் நாட்டைக் கட்டியெழுப்பலாம்

## சமிந்த எம்.பி. கருத்து

தலைமைத்துவ போட்டிக்கு அப்பால் சஜித் பிரேமதாச – ரணில் விக்கிரமசிங்க தரப்புக்கள் இணைந்தால் நிச்சயம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியுமென ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

பண்டாரவளை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமூகத்தில் கிடைக்கும் வெற்றியை நாட்டுக்கான வெற்றியாக மேம்படுத்தவேண்டும். எம்மால் உருவாக்கப்படுவதை யாராலும் தகர்த்துக்கொண்டு செல்லமுடியாது. அவ்வாறு தகர்த்தால் அது நாட்டின் நன்மைக்காகவே இருக்கவேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைத்துவமும் அக்கட்சியும்உருவாக்கப்பட்டதற்கானநோக்கம் என்ன என்பதை முழு நாட்டு மக்களும் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். ☞ 2

# மாகாண சபைத் தேர்தல் குறித்து அமைச்சருடன் பேச உள்ளோம்

## தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகள் குறித்து மாகாண சபைகள்மற்றும்உள்ளூராட்சிமன்றங்கள்அமைச்சுடன் கலந்துரையாட உத்தேசித்துள்ளோம். அத்துடன் சகல அரசியல்கட்சிகளுடனும்கலந்துரையாடவுள்ளோமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ரத்நாயக்க தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் குறித்து வினவிய போது இதனைத்தெரிவித்தார். அவர்மேலும்தெரிவித்ததாவது:

மாகாண சபைத் தேர்தல் விரைவாக நடத்தப்பட வேண்டும்என்றநிலைப்பாட்டில்உறுதியாகவுள்ளோம். சுதந்திரமானதும்,நீதியானதுமானமுறையில்தேர்தலை நடத்துவற்குரிய சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தால்தேர்தலைநடத்துவோம்.அரசுத்தலைவர்த் தேர்தல்,பொதுத்தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத்தேர்தலை அடுத்தடுத்து நடத்தினோம்.

சட்ட சிக்கலினால் தான் மாகாண சபைத் தேர்தல் காலவரையின்றி பிற்போடப்பட்டுள்ளது. இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு கடந்த கால அரசாங்கங்கள் மேற்கொண்ட சகல ☞ 2

# கட்சிப் பிரதிநிதிகள் 13 பேருக்கு சுவிஸில் சமஷ்டி பற்றி விளக்கம்

## அழைத்துச் செல்கிறது அந்நாட்டு ஆளும்தரப்பு

இலங்கையின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும்உறுப்பினர்கள்13பேரை சுவிட்ஸர்லாந்துக்கு அழைத்துச் சென்று, அந்நாட்டின் கூட்டாட்சி அரசியல் முறைமை மற்றும் தேசிய ஒருமைப்பாடு வலுவாக்கம் என்பன பற்றி விளக்கமளிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கும் அந்நாட்டு ஆளும்தரப்பு, அரசியல் மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கு உத்தேசித்திருக்கும் இலங்கைக்கு இந்நகர்வு பெரிதும் பயனுள்ளதாக அமையும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

எதிர்வரும்2026ஆம்ஆண்டுடன் இலங்கைக்கும்சுவிட்ஸர்லாந்துக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் ஆரம்பமாகி 70 வருடங்கள் நிறைவடைகின்றன. அதனை ☞ 2

## இனி இது .....

ஒன்று நுவரெலியாவில் இருப்பதாக அவர்கள் தெரிவித்த தகவலும்தான். விடயம் அந்த உற்பத்தி மையத்தோடு நின்றுவிட்டால் நிலமை பிரச்சினையில்லை. ஆனால் அது வளர்கிறது. இந்த உற்பத்தி மையத்திற்குத் தேவையான இரசாயனப் பொருள்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு இடத்தையும் பொலிஸார் வேட்டையாடி உள்ளனர். அந்த இரசாயனப் பொருள்கள் தொடர்பில் ராஜபக்சக்களின் பொது ஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். இதைத் தொடர்ந்து பெரமுன அவசர அவசரமாக அவரை கட்சியிலிருந்து தூக்கிவிட்டது. அதாவது இடைநிறுத்திவிட்டது. கட்சிகள் இப்படி நாடகமாடுவது ஒன்றும் புதிதில்லை.

வடக்கு மாகாண சபையில் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தவர் ஈபிடிபியைச் சேர்ந்த கமல் எனப்படும் கமலேந்திரன். ஈபிடிபி உறுப்பினரும் சகாவுமான நெடுந்தீவுப் பிரதேச சபை முன்னாள் தலைவர் டானியல் ரெக்ஸியனின் கொலை தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டபோது, அவரைக் கட்சியைவிட்டு நீக்கிவிட்டோம் என்று முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உடனடியாக ஊடகங்களுக்கு எல்லாம் அறிவித்தார். இந்த வழக்கில் பலர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டாலும் கமலுக்கும் ரெக்சியனின் மனைவிக்கும் எதிராக சட்ட மா அதிபர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கு இன்னும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கிறது. இருந்தாலும் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட கமல் இப்போதெல்லாம் முன்னாள் அமைச்சரோடுதான் சேர்ந்து திரிகிறார். கடைசியாக உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது வேட்புமனுத் தாக்கல் செய்ய டக்ளஸ் தேவானந்தாவோடு வந்தவர்களிலும் அவர் காணப்பட்டார். எனவே ஏதாவது பிரச்சினை என்று வந்தால் உடனே அவர்களைக் கைகழுவி விட்டுவிடுவதாக மக்களை ஏமாற்றுவதும் உள்ளே தொடர்ந்தும் தொடர்புகளைப் பேணி அவர்களை அரவணைப்பதும் கட்சிகளின் வழமைதான். ஆனால், இங்கு பிரச்சினை அதுவல்ல.

ஐஸ் போதைப் பொருள் தயாரிப்பதற்கான மூலப் பொருட்களான இரசாயனங்கள் கைப்பற்றப்பட்ட நிலத்தின் உரிமையாளரான பிரதேச சபை உறுப்பினரின் மற்றொரு நிலத்திலிருந்து பொலிஸார் கைக் குண்டுகளையும் துப்பாக்கித் தோட்டாக்களையும் கைப்பற்றியுள்ளனர். வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ஐந்து கைக்குண்டுகள், 56 காலிபர் துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் பதினேழு தோட்டாக்கள் மற்றும் மற்றொரு துப்பாக்கிக்குரிய மூன்று தோட்டாக்கள் என்பன கொழும்பு மேற்கு வடக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் நேற்று மாலை மீட்கப்பட்டன. அங்குணகொலபெலஸ்ஸ பிரதேச சபையின் இலங்கை பொதுஜன பெரமுனவின் முன்னாள் உறுப்பினர் ஒருவருக்குச் சொந்தமானது என்று நம்பப்படும் நிலத்திலிருந்தே இவை மீட்கப்பட்டன.

பிஸ்டல் துப்பாக்கி மற்றும் ஏ.கே - 47 ரக துப்பாக்கி அல்லது ரி-56 ரக துப்பாக்கிகளுக்கு உரிய தோட்டாக்கள் பறிமுதல் செய்யப்பட்டிருந்தால் அதிலொரு நியாயம் இருந்திருக்க முடியும். ஏனெனில் இன்று பாதாள உலக்கக் கும்பல்களின் பயன்பாட்டில் இருப்பவை இதுபோன்ற துப்பாக்கிகள்தான். ஆனால் கலிபர் துப்பாக்கிகளுக்கான தோட்டாக்களை வாங்கி ஏன் பதுக்கி வைத்தார்கள் என்பது ஆச்சரியமூட்டும் கேள்வியாக பொலிஸாரையே திணற வைத்துள்ளது. கலிபர் துப்பாக்கிகள் நீண்ட தூர வீச்சுக்கொண்டவை. போர்க் காலத்தில் 90களில் இலங்கை விமானப் படையின் சியாமா செட்டி, கூஃபிர் சகடை போன்ற விமானங்களுக்கு எதிராக விடுதலைப் புலிகள் இந்த வகைத் துப்பாக்கிகளைப் பயன்படுத்தி வந்தார்கள். நீண்ட தூர வீச்சுக் கொண்ட கனரக ஆயுத வகை என்பதால் அதனைப் பயன்படுத்தி வந்தனர். 2ஆம் உலகப் போர் காலத்தில் விமான எதிர்ப்பு ஆயுதங்களாக இவை பயன்படுத்தப்பட்டு வந்தன. கடற்படையினரின் சிறிய படகுகளில் இந்த வகைத் துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அத்தகைய துப்பாக்கிகளின் குண்டுகளை ஏன் இவர்கள் பதுக்கி வைத்திருக்கிறார்கள்? நீண்ட தூரங்களிலிருந்து அரசியல் தலைவர்களைப் படுகொலை செய்யவதற்கான நோக்கங்களோடு இந்தத் தோட்டாக்கள் பதுக்கப்பட்டிருந்தனவா? தோட்டாக்கள் இங்கிருக்கின்றன என்றால் இதற்கான கலிபர் துப்பாக்கிகள் எங்கே? போன்ற கேள்விகளுக்கு பொலிஸார் விடை தேடவேண்டியிருக்கின்றது.

பொலிஸாரால் இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்ட பாதாளக் கும்பல் தலைவர்களில் ஒருவரான பாக்கோ சமனிடம் இருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில், பிரதேச சபை உறுப்பினரின் வீடு மற்றும் மித்தெனிய தலாவ பகுதியில் உள்ள அவரது தோட்டம் மற்றும் அவரது மற்றொரு தோட்டம் என்பவற்றில் அதிகாரிகள் பல நாட்களாகச் சோதனை நடத்தி வந்தனர்.

இதில் மித்தெனிய தலாவ பகுதியிலுள்ள தோட்டத்திலிருந்துதான் ஐஸ் போதைப் பொருள் தயாரிப்பதற்கான மூல இரசாயனங்கள் ஆயிரக்கணக்கான கிலோ கைப்பற்றப்பட்டன. நேற்று பிரதேச சபை உறுப்பினருக்குச் சொந்தமான மரவள்ளிக்கிழங்குத் தோட்டத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைக்குண்டுகள் மற்றும் தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த விசாரணைகளின் விரிவாக்கம் எதைநோக்கி இனிப் போகும் என்பதே கொழும்பின் பரபரப்புக்குக் காரணம். ஏற்கனவே உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் விசாரணைகளும் நடந்துவரும் நிலையில், அவற்றை நோக்கியும் இந்த விசாரணைகள் திருப்பி விடப்படுமா என்பதை ஆர்வமாகக் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள் அரசியல்வாதிகள்.

......................................................

யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிந்த கையோடு கொள்கைக் கூட்டு ஒன்றில் ஆரவாரமாகக் கையெழுத்து வைத்தார்கள். அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் சின்னத்தில் தேர்தல்களின் போட்டியிட்டுவரும் அரசியல் அமைப்பான தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையில் சேர்ந்திருக்கும் தமிழ்த் தேசியப் பேரவையும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் இந்தக் கொள்கை உடன்படிக்கையில் கையெழுத்திட்டார்கள். இந்தக் கூட்டுக்குள், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு இருக்க முடியாது என்று வெளியேறி தமிழ்த் தேசியப் பேரவைக்குள் நுழைந்த சிறீகாந்தா, சிவாஜிலிங்கம் தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சியும் ஈபிடிபியில் இருந்து விலகி சமத்துவக் கட்சி என்ற பெயரில் அரசியல் நடத்தி வந்த சந்திரகுமார் தரப்பும் என்று எல்லாமும் இருக்கின்றன. அதுவும்போக, தமிழ் அரசுக் கட்சியிலிருந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்தும் வெளியேறிய உதிரிகளும் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோருமாகச் சேர்ந்துதான் கொள்கைக் கூட்டில் கையெழுத்து வைத்தார்கள். அந்தக் கையெழுத்து வைக்கும் சடங்கில் இருப்பதற்கு இடமின்றி ஒரு கிலோ மீற்றர் நீளத்திற்கு கட்சித் தலைவர்கள் எல்லோரும் அமர்ந்திருந்தார்கள். அப்படிக் கையெழுத்து வைக்கப்பட்ட ஒப்பந்தத்திற்கு இப்போது என்னவாயிற்று? அது இன்னும் நடைமுறையில் இருக்கிறதா? அல்லது உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைத்ததைத் தொடர்ந்து அதன் ஆயுள் முடிந்துவிட்டதா? கஜேந்திரகுமார் அல்லது கஜேந்திரன் ஒரு செய்தியாளர் சந்திப்பு வைத்து இதனைத் தெளிவுபடுத்தினால் நல்லது.

ஒரு காலத்தில் ஒப்பந்தங்களைக் கிழித்தெறிவது சிங்களவர்களின் பண்பு என்று சொல்லி, பண்டா செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தார்கள் என்றும் டட்லி செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தார்கள் என்றும் ஆக்ரோசமாகக் கத்தி அரசியல் செய்துவந்த தமிழ்த் தரப்புக்களுக்கு இப்போது ஒப்பந்தங்களைக் கிழித்தெறிவது என்பது லட்டுச் சாப்பிடுவது போன்று சுவையான அலாதி இன்பம் தருவதாக அமைந்துவிட்டது. ஏற்கனவே ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி உள்ளிட்ட 7 கட்சிகள் யாழ்ப்பாணத்தில் சிவில் அமைப்புக்களுடன் செய்துகொண்ட கூட்டு ஒப்பந்தம் அரசுத் தலைவர் தேர்தலில் இருந்து நாடாளுமன்றத் தேர்தலுக்குச் செல்வதற்கான இரண்டு மாத காலத்திற்குள் கிழித்தெறியப்பட்டது. அதனால் இப்போது கொள்ளை ஒப்பந்தத்திற்கு என்ன நடந்தது என்பதை அறிய ஆவலாக உள்ளது.

இப்போது ஏன் அந்த ஆவல் வந்தது என்கிறீர்களா? புளொட் தலைவர் சித்தார்த்தனின் தந்தையாரான தர்மலிங்கத்தின் 40ஆவது நினைவு நாள் நிகழ்வில் ஏற்கனவே சுமந்திரன் தலைமைப் பேச்சாளராக அழைக்கப்பட்டார் என்பதையும் அந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியப் பேரவை அல்லது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணித் தலைவர்களின் தலைக்கறுப்பைக்கூடக் காண முடியவில்லை என்பதையும் அதுவொரு தமிழ் அரசுக் கட்சி நிகழ்வுபோன்றே நடந்து முடிந்தது என்பதையும் இந்தப் பத்தியில் தெரியப்படுத்தியிருந்தேன். இப்போது, நேற்று, வவுனியாவில் நடந்த நிகழ்விலும் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரனும் நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கமும் கலந்துகொண்டிருக்கிறார்கள். கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள் கொள்கை ஒப்பந்தத்தில் கையெழுத்து வைத்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் அல்லது அந்தக் கூட்டணியில் உள்ள ஈபிஆர்எல்எவ் கட்சி. கூட்டமே அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதை வலியுறுத்தியது. அதாவது இந்தப் 13ஆவது திருத்தம் தமிழ் மக்களுக்கான இறுதித் தீர்வல்ல என்று கையெழுத்து வைத்த தரப்புக்களில் ஒன்று என்பதுடன் 13ஆவது திருத்தம் தீர்வுக்கான ஆரம்பப் புள்ளிகூட இல்லை என்று தெரிவித்து வரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் கொள்கை ஒப்பந்தத்தில் கையெழுத்து வைத்த தரப்புமான ஈபிஆர்எல்எவ் அமைப்பே இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்தது. அதிலேயே சுமந்திரன், சத்தியலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். அதுமட்டுமல்ல சுமந்திரன் அங்கு உரையாற்றவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

அதனால்தான் கேட்கிறேன் கொள்கைக் கூட்டு ஒப்பந்தம் இருக்கிறதா இல்லையா? .

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com

## சர்வாதிகார ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் பொலிஸாரின் மௌனம் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. அதேபோன்று முன்னிலை சோசலிச கட்சி அலுவலகத்துக்குள் அத்துமீறி பிரவேசித்து தாக்குதல்களை மேற்கொண்டவர்களுக்கு எதிராகவும் இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இவ்வாறிருக்கையில் தற்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மீதான அடக்குமுறைகளும் தொடங்கியுள்ளன. அந்த வகையிலேயே ஐ.சி.சி.பி.ஆர். சட்டத்தின் கீழ் முன்னாள் அமைச்சரும் பிவிதுரு ஹெல உருமய தலைவருமான உதய கம்மன்பிலவை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கு நாம் கடும் எதிர்ப்பினை வெளியிடுகின்றோம். முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தொடர்பான வழக்கு விசாரணை இடம்பெற்ற தினத்தில் சட்டம் பயிலும் மாணவர்கள், மதத் தலைவர்களுக்குகூட உள்நுழைவதற்கான அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் நீதிமன்றப் பதிவாளரிடம் வினவியபோது அவ்வாறு எந்தவொரு வரையறைகளும் நீதிமன்றத்தால் விதிக்கப்படவில்லை எனக் கூறினார். நிமல் லன்சாவை பார்க்க சிறைச்சாலை சென்ற அவரது சட்டத்தரணிக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அதற்காக காரணத்தை கேட்ட போது சட்டத்தரணிகள் அரசியல் ரீதியான கருத்துக்களை கூறுவதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உண்மையில் பொலிஸாருக்கோ சிறைச்சாலை அதிகாரிகளுக்கோ அது தேவையற்ற விடயமாகும். இதே நிலைமை தொடர்ந்தால் சிறிது காலத்தின் பின்னர் நீதிமன்றத்தை மூடி, சட்டத்தரணிகளின் செயற்பாடுகளை வரையறுத்து ஒரு கட்சி ஆட்சி முறைக்குச் சென்று விடுவர்.

மறுபுறம் வியத்புரதிட்டத்தின் கீழ் வீடுகளைக் கொள்வனவு செய்தவர்களுக்கான சலுகைகள் நீக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். 210 இலட்சம் பெறுமதியான வீட்டுக்கு இறுதியில் 310 இலட்சம் செலுத்துகின்றோம்.

இதில் எமக்கு எவ்வித சலுகைகளும் வழங்கப்படவில்லை. ஆளும்தரப்பு தவறுகளையும் குறைபாடுகளையும் மறைப்பதற்காக இவ்வாறு மக்களின் கவனத்தை எதிர்க்கட்சியினர் மீது திருப்புகின்றனர்.

இவற்றை நாம் நீதிமன்றத்தின் ஊடாக சவாலுக்குட்படுத்துவோம். 33 அரச நிறுவனங்கள் மூடப்படுவதை மறைப்பதற்காக இந்த விடயத்தை பரபரப்பாக வெளியிட்டுள்ளனர்.

தற்போது பொய்கள் பரவலாக சமூகமயப்படுத்தப்பட்டு கீழ் மட்டத்தில் எந்தவொரு வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படாத நிலைமை ஏற்பட்டுள்ளது. 5.3 சதவீத பொருளாதார வளர்ச்சி வேகத்துடன் எமது ஆட்சியில் நாட்டைக் கையளித்தோம். அது இன்று 4.8 சதவீதத்தை விட வீழ்ச்சியடைந்துள்ளது என்றார்.

## கட்சிப் பிரதிநிதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிட்டு இலங்கை - சுவிட்ஸர்லாந்து நாடாளுமன்ற நட்புறவு சங்கத்துடன் கூட்டிணைந்து சுவிட்ஸர்லாந்து ஆளும்தரப்பு மேற்படி செயலமர்வை ஏற்பாடு செய்துள்ளது.

இம்மாதம் 14 - 21 ஆம் திகதி வரை சுவிட்ஸர்லாந்தில் நடைபெறவுள்ள இச்செயலமர்வில் பங்கேற்பதற்கு இலங்கையின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு அந்நாட்டின் வெளிவிவகாரங்களுக்கான கூட்டாட்சித் திணைக்களத்தின் சமாதானம் மற்றும் மனித உரிமைகள் பிரிவின் செயலாளரால் அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து அக்கட்சிகளால் உறுதிப்படுத்தப்பட்டதன் அடிப்படையில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் கிராமிய அபிவிருத்தி, சமூகப்பாதுகாப்பு மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சரும் இலங்கை - சுவிட்ஸர்லாந்து நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் தலைவருமான கலாநிதி உபாலி பன்னிலகே, தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முலஃப்பர், நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை - சுவிட்ஸர்லாந்து நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் செயலாளர் சந்திம ஹெட்டியாராச்சி, நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளருமான நிஹால் அபேசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான நிலாந்தி கொட்டஹச்சி மற்றும் சமன்மலி குணசிங்க ஆகியோரும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அலவத்துவலவும், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கமும், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அதன் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தலதா அத்துகோரளவும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் அதன் ஊடகப்பேச்சாளர் சுரேஷ் பிரேமசந்திரனும், மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் பத்மா மஞ்சுளவும், தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினரும் யாழ்.மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருக்கான ஒருங்கிணைப்பு செயலாளருமான கபிலனும் இதில் பங்கேற்கவுள்ளனர்.

சுவிட்ஸர்லாந்தில் 8 நாட்கள் நடைபெறவுள்ள இச்செயலமர்வின்போது சுவிட்ஸர்லாந்தின் அரசியல் முறைமை மற்றும் இருதரப்பு உறவுகள், சுவிட்ஸர்லாந்தின் கூட்டாட்சி முறைமையை ஆழமாகப் புரிந்துகொள்ளல் ஆகிய தலைப்புக்களில் இலங்கை அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு விரிவான தெளிவூட்டல்கள் வழங்கப்படவிருப்பதுடன் முக்கிய கட்டமைப்புக்களுக்கான கள விஜயங்கள் மற்றும் உயர்மட்ட சந்திப்புக்கள் என்பனவும் இடம்பெறவுள்ளன.

இச்செயலமர்வானது சுவிட்ஸர்லாந்தின் அரசியல் முறைமையை ஆழமாகப் புரிந்துகொள்வதற்கும், ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்குமான வாய்ப்பை இலங்கை அரசியல்வாதிகளுக்கு வழங்கும் என நம்பிக்கை வெளியிட்டுள்ள இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்து தூதுவர் சிரி வோல்ற், இலங்கை அரசியல் மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கு உத்தேசித்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் சுவிஸ் அரசியல் முறைமையின் முக்கிய கூறுகளை உள்வாங்குவதற்கும், பல்லின மற்றும் பன்மொழி சமூகங்களுக்கு மத்தியில் தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்புவது குறித்து அறிந்துகொள்வதற்கும் இது உதவும் எனத் தெரிவித்துள்ளார்.

# சட்டவாட்சிக் கோட்பாட்டுக்கமைய அமைச்சர் லாலிடமிருந்து விசாரணை

## தொடங்கவேண்டும் என்கிறார் தயாசிறி எம்.பி.

சட்டவாட்சியின் கோட்பாடுகளுக்கமைய சட்டம் அனைவருக்கும் சமமாக நடைமுறைப்படுத் தப்படுமென அரசுத் தலைவர் அநுரகுமார தெரிவித்துள்ளமை வரவேற்கத்தக்கது. எனவே 1988, 1989களில் தேசிய சொத்துக்கள் பல அழிக்கப்பட்டமை தொடர்பில் அமைச்சர் லால் காந்தவிடமிருந்து விசாரணைகள் தொடங்கப்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தினார்.

கொழும்பில் வெள்ளிக்கிழமை செய்தியா ளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

149ஆவது பொலிஸ் ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க குற்றச்செயல்கள் மேலும் தொடர்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது எனத் தெரிவித்திருந்தார்.

அரசுத் தலைவரின் கருத்தை நாம் வரவேற்கின்றோம். ஆனால் அவர் அதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் லால் காந்தவிடமிருந்து தொடங்க வேண்டும். 1988, 1989களிலேயே நாட்டில் பேரழிவுகள் ஏற்படுத்தப்பட்டன.

பல தேயிலை தொழிற்சாலைகள், பேருந்துகள், விவசாய சேவை மத்திய நிலையங்கள், மின் பிறப்பாக்கிகள் மற்றும் நெற் களஞ்சியசாலைகள் உள்ளிட்ட பல பொது சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்டன. மின் கம்பங்கள் உடைத்து நொருக்கப்பட்டன. அமைச்சர் லால் காந்த இவை தொடர்பிலான பிரதான சாட்சியாளராவார்.

மிகவும் ஆசையுடனேயே நாம் அவற்றை அழித்தோம் என்று கூட அவர் கூறியிருக்கின்றார். எனவே அவரிடமிருந்து விசாரணைகளை தொடங்குகுமாறு கேட்டுக் கொள்கின்றோம். இவை தவிர மேலும் பல சம்பவங்கள் ஆதரங்களுடன் நிரூபிக்கக் கூடியவையாகவுள்ளன.

எதிர்வரும் நாட்களில் அவை தொடர்பில் ஒவ்வொன்றாக நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த எதிர்பார்த்துள்ளோம். இவை மாத்திரமின்றி அதன் பின்னர் இடம்பெற்ற இவ்வாறான சம்பவங்கள் குறித்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று நம்புகின்றோம்.

அத்தோடு சட்டம் எவ்வாறு அனைவருக்கும் சமமமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது என்ற சட்டத்தின் கோட்பாடுகள் குறித்தும் அவர் தெரிவித்திருந்தார்.

கடந்த வாரம் யக்கல பிரதேசத்தில் உள்ள முன்னிலை சோசலிச கட்சி அலுவலகத்துக்குள் காலை 6 மணியளவில் பலவந்தமாக உள்நுழைந்த குழுவொன்று அங்கிருந்தவர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது.

இவற்றைகாணொளிபதிவுசெய்தகமராக்கள்உள்ளிட்டவை அந்த குழுவினரால் அடித்து உடைக்கப்பட்டுள்ளன. அவை உடைக்கப்பட்டிருந்தாலும் நேரில் கண்ட சாட்சிகளை அழிக்க முடியாது. அது மாத்திரமன்றி இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மபிரிய விஜேசிங்க கருத்தொன்றையும் தெரிவித்துள்ளார். இதன் மூலம் அவர் சம்பவ இடத்தில் இருந்திருக்கின்றார் என்பது தெளிவாகிறது.

அதேபோன்று பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் தர்மப்பிரிய விஜேசிங்க, சாமிந்த லலித் குமார, ஸ்டெப்னி பெர்னான்டோ உள்ளிட்டோரும் இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்பதற்கான சாட்சிகள் உள்ளன. நீதிமன்ற தீர்ப்பிற்கமைய சட்ட அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளிலேயே இவர்கள் தலையிட்டுள்ளனர்.

பலவந்தமாக அலுவலகத்துக்குள் நுழைந்தமை, அங்கிருந்தோரைத் தாக்கியமை, அவர்களை காயத்துக்குள்ளாக்கியமை உள்ளிட்ட பல்வேறு குற்றங்களை இவர்கள் செய்துள்ளனர். இது பெலவத்த கட்சி தலைமையகத்திலிருந்து வந்த உத்தரவுக்கமைய இடம்பெற்ற சம்பவமாக இருக்கலாம் என்று நம்புகின்றோம். எனவே நாட்டின் அரசுத் தலைவர் என்ற ரீதியில் நீங்கள் கூறிய சட்டவாட்சியின் கோட்பாட்டைப் பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றோம் என்றார்.

# ஐஸ் போதைக்கான மூலப் பொருளை வைத்திருந்த பெரமுன உறுப்பினர் கைது

## கட்சியும் அவரைப் பதவி நீக்கியது

போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள சம்பத் மனம்பேரி என்பவர் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வாறான குற்றச்சாட்டுகளுக்குதாம்தளர்வான கொள்கையை கடைப்பிடிக்க போவதில்லை என்றும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அறிவித்துள்ளது.

மித்தெனிய, தலாவ பகுதியில் உள்ள வீடொன்றில் புதைக்கப்பட்டிருந்த ஐஸ் ரக போதைப்பொருளை தயாரிக்கப் பயன்படுத்தப்படும் சுமார் 50,000 கிலோகிராம் இரசாயனங்கள் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சம்பத் மனம்பேரி கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பத் மனம்பேரியின் கட்சி உறுப்புரிமையை உடன் அமுலுக்கு வரும் வகையில் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளயிட்டுள்ள ரீ லங்கா பொதுஜன பெரமுன,

அங்குனுகொலபெலஸ்ஸ, தலாவைச் சேர்ந்த சம்பத் மனம்பேரி என்ற எமது கட்சி உறுப்பினர் மீது போதைப்பொருள் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களை தம்வசம் வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளவர்கள் மீது எங்கள் கட்சி ஒருபோதும் தளர்வான கொள்கையைப் பின்பற்றுவதில்லை, அதன்படி, அவரது கட்சி உறுப்பினர் பதவி உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தடை செய்யப்பட்டுள்ளது.

இருப்பினும்,அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு மிகவும் பாரதூரமான குற்றச்சாட்டு,மேலும் அவர் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகள் மிக விரைவில் முடிவுக்கு வந்து உண்மை பொதுமக்களுக்கு வெளிப்படும் என்று ஒரு கட்சியாக நாங்கள் நம்புகிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.




# கோமாரியில் கோர விபத்து பலர் காயம்; ஒருவர் சாவு

(பாறுக் ஷிஹான்)

கோமாரிப் பகுதியில் பேருந்தொன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார். 52 பேர் காயமடைந்தனர்.

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று - பெத்துவில் வீதியில் கோமாரி பகுதியில் நேற்று மாலை கெப்பட்டிபொல பகுதியிலிருந்து சுற்றுலா சென்ற பேருந்தொன்றே விபத்துக்குள்ளாகியுள்ளது.

பேருந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதற்கு சாரதியின் தூக்கக் கலக்கமே விபத்துக்கு காரணம் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும் விபத்தில் உயிரிழந்தவர் வெலிமடை பகுதியைச் சேர்ந்த 74 வயதுடைய நபர் என பொலிஸார் தெரிவித்தனர். குறித்த விபத்தில் சிக்கியவர்கள் வெலிமடையில் இருந்து இன்று காலை பயணத்தை மேற்கொண்டு அம்பாறை தீகவாபி ராஜமாக விகாரைக்கு வருகை தந்து சமய வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் அங்கிருந்து பொத்துவில் அறுகம்பே பிரதேசத்திற்கு செல்லும் வழியில் கோமாரியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிய வருகின்றது.

விபத்தில் காயமடைந்தவர்கள் பொத்துவில் மற்றும் திருக்கோவில் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர்.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# காவல்துறையின் திறமையின்மையா? ஆளும்தரப்பின் தயக்கமா?

இலங்கை ஆளும்தரப்பு கடந்த சில மாதங்களாகவே 'காவல் துறையினருக்குசுதந்திரமாகவும்சுயாதீனமாகவும்செயற்படுவதற்கான சூழல் உருவாக்கப்பட்டுள்ளது' என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறது. அதோடு பாதாள உலகக் குழுக்களை கட்டுப்படுத்துவதற்கும் அழிக்கவும் தீவிர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன என்றுஅறிவிப்புச்செய்யப்படுகிறது. ஆனால்உண்மைநிலைமைஅதற்கு முரணானது என்பதை புள்ளிவிவரங்களே வெளிப்படுத்துகின்றன.

கடந்த ஆண்டு முழுவதும் மேற்கு மற்றும் தெற்கு மாகாணங்களில் மட்டும் 350க்கும் மேற்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் 125க்கும்மேற்பட்டோர்உயிரிழந்துள்ளனர். காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 200ஐத் தாண்டியுள்ளது. இந்த ஆண்டு (2025) முதல் எட்டு மாதங்களிலேயே 150க்கும் மேற்பட்ட துப்பாக்கிச் சூடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தினமும் பத்திரிகைப் பக்கங்களைப் புரட்டினால் எங்காவது ஒரு துப்பாக்கிச் சூடு செய்தி இடம்பெறாமல் போவது இல்லை.

இந்நிலையில், 'காவல்துறை சுதந்திரமாக செயல்படுகிறது' என்று ஆளும்தரப்பு கூறுவது வெறும் காட்டுக்கத்தலாகவே மக்கள் மத்தியில் பதிவாகி வருகிறது. காவல்துறை உண்மையில் சுயாதீனமாகவும் திறமையாகவும் செயல்பட்டிருந்தால் இவ்வளவு அதிக அளவில் துப்பாக்கிச் சூடுகள் தொடர்ந்திருக்கும் நிலை உருவாகியிருக்காது. இதைப் பார்க்கும்போது குற்றக் கும்பல்களை அழிக்கக்கூடிய திறமை காவல்துறையினருக்கு உண்டா? என்ற கேள்வி இன்று பொதுமக்கள் மத்தியில் எழுகிறது.

மேலும், பல துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டும், வழக்குகள் தொடுக்கப்பட்டும், நீதிமன்ற நடவடிக்கைகள் நடைபெறுகின்றன என்றாலும், குற்ற உலகின் வேர் அறுக்கும் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. குற்றவாளிகள் சிறையில் இருந்தாலும் அங்கிருந்து குற்றங்களைத் திட்டமிட்டு நெறிப்படுத்துகின்றனர் என்பது திறந்த ரகசியமாகவே மாறியுள்ளது. இதுவே காவல்துறை நடவடிக்கைகளின் தோல்வியை வெளிப்படுத்துகிறது.

இந்நிலையில் முக்கியமான கேள்வி எழுகிறது – காவல்துறை இந்தக் குற்றக் கும்பல்களை ஒழிக்கத் திறனற்றதாக இருந்தால், அரச பாதுகாப்புப் படையினரையும் புலனாய்வுப் படையினரையும் இந்தப் போராட்டத்தில் ஏன் ஆளும்தரப்பு பயன்படுத்தவில்லை? இலங்கையில் முன்னர் பல்வேறு சூழல்களில், குறிப்பாகப் போர் காலங்களில், பாதுகாப்புப் படைகள் எவ்வாறு கடுமையான நடவடிக்கைகளை எடுத்தன என்பதை வரலாறு சாட்சியமாகக் கொண்டிருக்கிறது. அப்படியிருக்கையில் இன்று பொதுமக்கள் உயிருக்கு ஆபத்தான துப்பாக்கிச் சூடுகள் மேற்கிலும் தெற்கிலும் தினசரி நடைபெறும்போது, பாதுகாப்புப் படைகள் எதற்காகப் புறக்கணிக்கப்படுகின்றன?

ஆளும்தரப்புஇதற்கு'சட்டத்தின்ஆட்சியின்கீழ்காவல்துறையினரே இந்த விடயங்களை கையாள வேண்டும்' என்று வாதிடலாம். ஆனால், சட்டத்தின் ஆட்சி என்ற பெயரில் மக்கள் உயிர்களைப் பறிகொடுக்கச்செய்வது எந்த அளவுக்கு நீதியானது? மக்கள் உயிரைப் பாதுகாப்பது ஆளும்தரப்பின் முதன்மையான கடமையாகும். அதைக் காவல்துறையால் செய்ய முடியாவிட்டால், மாற்றுத் தீர்வுகளைத் தேடுவதுதான் ஆளும்தரப்பின் பொறுப்பு.

பாதாள உலகக் குழுக்களின் ஆட்சி மக்கள் மத்தியில் பயத்தை விதைக்கிறது. சிறுவர் முதல் முதியோர் வரை யாரும் பாதுகாப்பாக இல்லை என்ற மனநிலை பரவி வருகிறது. மக்கள் வீட்டுக்கு வெளியே செல்லும் போதெல்லாம் துப்பாக்கிச் சூடு ஏற்படுமோ என்ற பயம் மனதில் தங்கியிருக்கிறது. இப்படிப்பட்ட சூழலில், ஆளும்தரப்பு தினமும் காவல்துறையின் சுயாதீனத்தையும் திறமையையும் புகழ்ந்து பேசுவது நம்பகமற்ற ஒன்றாகவே தெரிகிறது.

எனவே, ஆளும்தரப்பிற்கு மக்கள் முன்வைக்கும் கேள்விகள் தெளிவானவை:

காவல்துறையினருக்கு இந்தக் குற்றக் கும்பல்களை ஒழிக்கும் திறமை உள்ளதா?

குற்றக் கும்பல்களை ஒழிப்பதற்கு பாதுகாப்புப் படைகள் மற்றும் அவற்றின் புலனாய்வுத் திறன் ஏன் பயன்படுத்தப்படவில்லை?

பொதுமக்களின் உயிரைப் பாதுகாக்கும் பொறுப்பு எப்போது உண்மையில் நிறைவேற்றப்படும்?

இந்தக்கேள்விகளுக்குநேரடியான, தெளிவானபதில்அளிக்காமல், வெறும் காட்டுக்கத்தலால் சூழ்நிலையை சமாளிக்க முடியாது. இன்று மக்கள் வேண்டுவது அரசின் உறுதியான செயல், வார்த்தைகள் அல்ல. ஆளும்தரப்பு உண்மையில் குற்ற உலகைக் கட்டுப்படுத்த விரும்புகிறதா என்ற சந்தேகம் மக்களிடையே எழுந்துவிட்டது. அந்தச் சந்தேகத்தைக் களைவதே ஆளும்தரப்பின் உடனடி கடமை.

# தினந்தோறும் துப்பாக்கிச்சூடு மக்களுக்குப் பாதுகாப்பில்லை

## எதிர்க் கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

நாட்டில் தற்போது தினந்தோரும் இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கிச்சூடுகள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதனால் மக்களின் வாழ்க்கை பாதுகாப்பற்றாக மாறியுள்ளது. அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மக்கள் உயிர் வாழ்வதற்கான உரிமையை உறுதிப்படுத்த வேண்டியது ஆளும்தரப்பு பொறுப்பாகும். அதற்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படுமென எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று விசேட அறிக்கையொன்றை வெளியிட்ட எதிர்க்கட்சி தலைவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது :

நாட்டில் தற்போது தினந்தோரும் இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கிச்சூடுகள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதனால் மக்களின் வாழ்க்கை பாதுகாப்பற்றாக மாறியுள்ளது. குறிப்பாக அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகின்றனர். இராஜ் வீரரத்ன மற்றும் மிலிந்த ராஜபக்ச ஆகியோர் இந்த அடிப்படையிலேயே அச்சுறுத்தப்பட்டுள்ளனர். இலக்கத்தகடு அற்ற மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களால் இவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு தொடர்பில் வகுப்பு நடத்துவாத எம்மை கேலி செய்வர்களது ஆட்சியிலேயே இவ்வாறு இடம்பெறுகிறது. இந்த சம்பவங்கள் அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மக்கள் உயிர் வாழ்வதற்கான உரிமையை கேள்விக்குள்ளாக்குகின்றன. சமூக வலைத்தள செயற்பாட்டாளர்களுக்கு விடுக்கப்படும் இந்த அச்சுறுத்தல்கள் ஜனநாயகத்தின் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதலாகும். எனவே இவற்றை உடனடியாக தடுப்பதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறித்த இனந்தெரியாத மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து உண்மையைக் கண்டறிவது ஆளும்தரப்பு பொறுப்பாகும். ஆளும்தரப்பு முன்னெடுக்கும் நல்ல விடயங்களைப் பாராட்டுவதற்கும் தவறான விடயங்களை விமர்சிப்பதற்கும் நாட்டிலுள்ள சகல பிரஜைகளுக்கும் உரிமையுள்ளது.

ஆளும்தரப்பு சரி, தவறுகளை சுட்டிக்காட்டுவது ஆளும்தரப்பு பொறுப்பல்ல. அவற்றை சுட்டிக் காட்டுவதற்கு 220 இலட்சம் மக்களுக்கும் சிறந்த புரிதல் காணப்படுகிறது. அது மக்களின் உரிமையாகும். அந்த உரிமையை அரசாங்கத்துக்கோ குண்டர் கும்பலுக்கோ சவாலுக்கு உட்படுத்துவதற்கு எந்தவொரு அதிகாரமும் இல்லை.

சமூகத்தில் அதிகரித்து வரும் இந்த வன்முறை, கொலை கலாசாரம் உடனடியாக தோற்கடிக்கப்பட வேண்டும். அதுவே ஆளும்தரப்பு பொறுப்பாகும். அதற்கு அரசாங்கத்துக்கு தேவையான முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம். ஆளும்தரப்பு கேட்க விரும்பாத விடயங்களை சமூக வலைத்தள செயற்பாட்டாளர்கள் கூறும் போது அவர்களுக்கு அச்சுறுத்தல் விடுப்பது ஆளும்தரப்பு பணியல்ல.

மாறாக அவர்கள் கூறுவதைக் கேட்டு தமது தவறுகளை திருத்திக் கொண்டு நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும். ஊடகங்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாம் முன்னிற்பதோடு மாத்திரமின்றி, ஆளும்தரப்பு பொறுப்;பையும் நாம் ஏற்றுக் கொள்வோம்.

# செம்மணியில் 2ம் கட்ட அகழ்வு நேற்றுடன் நிறைவுக்கு வந்தது

## அடுத்த கட்டம் குறித்து செப். 18இல் முடிவு



செம்மணி - சித்துபாத்தி மனிதப் புதைகுழியின்இரண்டாம்கட்ட அகழ்வு பணிகள்நேற்றுடன்நிறைவுக்குவந்துள்ள நிலையில் இதுவரை 240 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் - செம்மணி - அரியாலை சித்துபாத்தி இந்து மயான மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் 45ஆவது நாளாக யாழ்ப்பாண மாவட்ட மேலதிக நீதவான் செல்வநாயகம் லெனின்குமார் முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டது.

செம்மணி மனித புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகளுக்காக நீதிமன்றம் 45 நாட்கள் அனுமதி வழங்கிய நிலையில் இரண்டாம் கட்டத்தின் மூன்றாம் பகுதி அகழ்வு பணிகள் கடந்த 25ஆம் திகதி தொடங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அடுத்த கட்ட அகழ்வு, செப்டம்பர் 18 அன்று நடைபெறவுள்ள நீதிமன்ற வழக்கு விசாரணைக்குப் பிறகு, முன்மொழியப்பட்ட பட்ஜெட்டும் இடைக்கால நிபுணர் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் தீர்மானிக்கப்படும்.



தடயவியல் அகழ்வாய்வுத் தளம் 1, ஆரம்பத்தில் 11 மீட்டர் நீளமும் அகலமும் கொண்டதாக இருந்தது. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப்பணிகளின் போது அது விரிவுபடுத்தப்பட்டு நீட்டிக்கப்பட்டு தற்போது 23.40 மீட்டர் நீளமும் 11.20 மீட்டர் அகலமும் கொண்டதாக உள்ளது.

இதுவரை இடம்பெற்ற அகழ்வு நடவடிக்கையில் 14 சிக்கலான முறையில் உள்ள குவியல்களாகவும் எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன .72-க்கும் மேற்பட்ட சான்றுப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன

# இரு நாள்களில் 4 துப்பாக்கிச் சூடுகள் ஒருவர் இறப்பு; மற்றொருவர் காயம்

நாட்டில் இடம்பெற்ற நான்கு வெவ்வேறு துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களில் 26 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டுசம்பவங்கள்நேற்றும்வெள்ளிக்கிழமையும் கொழும்பு கிராண்ட்பாஸ், மருதானை, நீர்கொழும்பு மற்றும் பாணந்துறை ஆகிய பிரதேசங்களில் பதிவாகியுள்ளதுடன் இதன்போது சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 96 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன் இதில் 50 பேர் உயிரிழந்துள்ளனர்.

### கிராண்ட்பாஸ் துப்பாக்கிச்சூடு

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹவத்த மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகாமையில் நேற்றுமுன்தினம் இரவு 11.45 மணியவில் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் வருகை தந்த அடையாளம் தெரியாத இருவர் நபர் ஒருவரை இலக்கு வைத்து இந்தத்துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த துப்பாக்கிச் சூட்டுக்கு ரிவோல்வர் ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் சம்பவத்தின் போது காயமடைந்த நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

26 வயதுடைய கொட்டாஞ்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே சம்பவத்தின் போது உயிரிழந்துள்ளார். தொலைபேசி அழைப்பொன்றை மேற்கொண்டு குறித்த இளைஞரை சம்பவ இடத்துக்கு வரவழைத்து இந்த துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. எவ்வாறாயினும் உயிரிழந்த நபர் எந்தவித குற்ற செயல்களுடன் தொடர்புடையவர் அல்லர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் துப்பாக்கிதாரிகளுக்கு துப்பாக்கியை பெற்றுக்கொடுத்து அவர்களுக்கு உதவி ஒத்தாசை வழங்கிய குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பிரதிப் பொலிஸ் மாஅதிபர் நிஷாந்த டி சொய்சா தெரிவித்துள்ளார். சம்பவம் தொடர்பில் கிராண்ட்பாஸ் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### மருதானை துப்பாக்கிச்சூடு

மருதானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பஞ்சிகாவத்தை பிரதேசத்தில் நேற்று அதிகாலை 1.40 மணி அளவில் மற்றுமொரு துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் வருகை தந்த அடையாளம் தெரியாத இருவர் நபரொருவரை இலக்கு வைத்து இந்தத்துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது பலத்த காயமடைந்த குறித்த நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

44 வயதுடைய பஞ்சிகாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் சமப்வத்தின் போது காயமடைந்துள்ளார்.

குறித்த நபர் திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என அறியப்படும் '''பஞ்சிகாவத்தை நெவில்'' என்பவருடன் நெருங்கிய தொடர்புகளை பேணிய ஒருவரென பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்நிலையில் " கெசெல்வத்த கவி" என அழைக்கப்படும் பாதாள உலகக்குழுவினரால் இந்தத்துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் மோட்டார் சைக்கிளின் ஓட்டுநர் புளுமெண்டல் பிரதேசத்தில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் துப்பாக்கிப் பிரயோகத்தில் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் மோட்டார் சைக்கிள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும் பிரதான துப்பாக்கிதாரி அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவரை கைது செய்வதற்கான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

### நீர்கொழும்பு துப்பாக்கிச்சூடு

நீர்கொழும்பு குட்டிதுவ பிரதேசத்தில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் வீடொன்றை இலக்கு வைத்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் வருகை தந்த அடையாளம் தெரியாதஇருவர்இந்தத்துப்பாக்கிப்பிரயோகத்தைமேற்கொண்டு விட்டு தப்பிச்சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லையென பொலிஸார் தெரிவித்தனர். தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தத்துப்பாக்கிப்பிரயோகம் இடம் பெற்றிருக்கலாமென சந்தேகம் வெளியிட்டுள்ள பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைது செய்ய மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### பாணந்துறை துப்பாக்கிச்சூடு

பாணந்துறைஅலுபோவமுல்லசந்தகலவத்த பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையமொன்றின் உரிமையாளரை இலக்கு வைத்து நேற்று முற்பகல் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தனிப்பட்ட தகராறு காணரமாக இந்தத் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆரம்ப கட்டவிசாரணைகளில் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

இந்ததுப்பாக்கிப்பிரயோகம் வெளிநாட்டில் தலைமறைவாகி இருக்கும் பாதாள உலக குழுவொன்றின் உறுப்பினரால் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கலாமென பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் நேற்றும் நேற்றுமுன்தினமும் நாட்டின் நான்கு வெவ்வேறு பிரதேசங்களில் துப்பாக்கிப் பிரயோகம் பதிவாகியுள்ளது. இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இதற்கமைய இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில்நாடளாவியரீதியில்96துப்பாக்கிசூடுசம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதில் 50 பேர் உயிரிழந்துள்ளதுடன் 53 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# தமது கைகளில் குருதிக்கறை படியவே இல்லையாம்

## நாமலின் கருத்து இது

*எமது கரங்களில் குருதிக்கறை படியவில்லை. சட்டவிரோத செயற்பாடுகளுக்கு நாம் துணைபோகவில்லை. போதைப்பொருள் வியாபாரத்தை ராஜபக்சக்கள் மீது சுமத்த இடமளிக்கப் போவதில்லை. உண்மையை வெளிப்படுத்தும்வரை ஆளும்தரப்புக்கு அழுத்தம் பிரயோகிப்போம். நுவரெலியாவில் நடத்திச் செல்லப்பட்ட ஐஸ்போதைப்பொருள்நிலையத்தின் இடம் யாருக்குச் சொந்தமானது என்பதை ஆளும்தரப்பு வெளிப்படுத்தவேண்டும். சமூக வலைத்தளங்களில் முன்வைக்கும் குற்றச்சாட்டை முழுமையாக நிராகரிக்கிறோம் என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.*

*ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பணியிடத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:*

*ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் தொடர்பில் பொலிஸார்மாறுப்பட்ட விடயங்களை குறிப்பிட்டுள்ளனர். முறையான விசாரணைகளை பொலிஸார் மேற்கொள்ள வேண்டும். கட்சி மட்டத்தில் அந்த உறுப்பினரின் உறுப்புரிமை நீக்கப்பட்டுள்ளது. அரசியல் பழிவாங்கலில்லாமல் நடுநிலையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.*

*ஒழுக்கமாகவே நாங்கள் செயற்படுகிறோம். கட்சியில் எவரேனும் உறுப்பினர் ஒழுக்கமற்ற வகையில் செயற்பட்டால் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். தனது அரசியல் நிலைப்பாட்டுக்கு இந்தச் சம்பவத்தை ஆளும்தரப்புப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது. நடுநிலையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டால் மாத்திரமே உண்மை வெளிவரும், நியாயம் கிடைக்கும்.*

*உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்தில் தமது பொறுப்பை சரிவர செய்யவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஆளும்தரப்பு உயர் பதவிகளில் உள்ளார்கள். பொறுப்பற்ற வகையில் செயற்பட்டதற்கான பொறுப்பினை அவர்கள் ஏற்காமல் அதனையும் பிறிதொரு தரப்பினர் மீது சுமத்துகிறார்கள்.*

*சுங்கத்தில்இருந்துஎவ்விதபரிசோதனைகளுமின்றி விடுவிக்கப்பட்ட கொள்கலன்கள் தொடர்பில் பொலிஸாருக்கு மூன்கூட்டியதாகவே தகவல்கள் கிடைத்திருந்ததா, வெளிநாட்டு புலனாய்வு பிரிவு இந்த கொள்கலன்கள் தொடர்பில் ஏதேனும் அறிவித்திருந்ததா,*

*நுவரெலியா பகுதியில் ஐஸ் போதைப்பொருள் உற்பத்தி நிலையம் நடத்திச் செல்லப்பட்டுள்ளதாக தற்போது குறிப்பிடப்படுகிறது. இந்த இடம் யாருக்கு சொந்தமானது என்பதை ஆளும்தரப்பு பகிரங்கப்படுத்த வேண்டும். இலங்கையை போதைப்பொருள் மையமாக மாற்றியமைக்க வேண்டாம் என்று அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறோம்.*

*எமது கரங்களில் இரத்தக்கறை படியவில்லை. சட்டவிரோதசெயற்பாடுகளுக்குநாங்கள்ஒருபோதும் துணைபோகவில்லை. ஆகவேநாங்கள் திணறபோவதில்லை என்று அரசாங்கத்திடம் குறிப்பிட்டுக் கொள்கிறோம். முறையான மற்றும் நடுநிலையான விசாரணைகளை மேற்கொண்டு உண்மையை வெளிப்படுத்தவேண்டியபொறுப்புபொலிஸாருக்கு உண்டு. போதைப்பொருள் வியாபாரத்தை ராஜபக்சர்கள் மீது சுமத்த இடமளிக்க போவதில்லை. உண்மையைவெளிப்படுத்தும்வரை அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிப்போம் என்றார்.*

# திட்டமிட்ட குற்றச்செயல்களைத் தடுக்க சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

*நாட்டில் இடம்பெற்று வரும் சமூகவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த பொலிஸார் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றனர். இதற்கமைய எம்மால் திட்டமிட்ட குற்றச் செயல்களை கட்டுப்படுத்த முடியும். அதற்காக சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உதயகுமார வுட்லர் தெரிவித்தார்.*

*கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்ட போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:*

*அண்மைய நாட்களாக பொதுமக்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கு அமையவே பொலிஸாரினால் வெற்றிகரமான முறையில் பல சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்தது.*

*எனவே நாம் பொதுமக்களுக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம். எதிர்காலத்திலும் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த பொலிஸாருக்கு உதவுமாறு கோரிக்கை விடுக்கிறோம்.*

*அதேபோன்று இந்த நாட்களில் நாட்டில் இடம்பெறும் சமூகவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த பொலிஸார் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றனர்.எம்மால் திட்டமிட்ட குற்றச் செயல்களை கட்டுப்படுத்த முடியும் என நம்புகிறோம். அதற்காக சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்றார்.*

*இதன்போது கொழும்பு மாவட்டத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் நிஷாந்த டி சொய்சா தெரிவிக்கையில்*

*நாட்டில் கடந்த சில நாட்களாக துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகி வருகின்றன. எனினும் நாம் முறையாக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம்.*

*அதேபோன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மருதானை துப்பாக்கிச்சூட்டுசம்பவத்துடன்தொடர்புடையதுப்பாக்கிதாரிகளை பின்தொடர்ந்து சென்று அவர்களில் ஒருவரை கைது செய்திருந்தோம் எதிர்காலத்திலும் நாம் முறையான விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளோம். அத்துடன் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த திட்டங்களை வகுத்துள்ளோம். எனவே எம்மால் திட்டமிட்ட குற்றச் செயல்களை கட்டுப்படுத்த முடியும் என நம்புகிறோம் என்றார்.*

காலைக்கதிர் Kalaikkathir

# போதைப் பொருளுக்கான மூலப் பொருள்களான இரசாயனங்களைக் கடத்தும் அரசியல்வாதிகள்

## அவர்களின் ஒளிப்படங்கள் தம்மிடம் என்கிறார் பாதுகாப்பு பிரதி அமைச்சர்

போதைப்பொருள் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் இரசாயனங்களை கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட கொள்கலன்களின் உரிமையாளர்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளின் புகைப்படங்கள் எமக்கு கிடைத்துள்ளன. இந்த அரசியல்வாதிகளே போதைப்பொருள் விநியோக சங்கிலியின் பின்னால் உள்ளனர். இது தொடர்பில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு அவர்கள் தராதரமின்றி சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார் என பொது மக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

ஹோமாகமவில் நேற்று சனிக்கிழமை இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

போதைப்பொருள் தயாரிப்புக்கு பயன்படுத்தப்படும் இரசாயனங்களை கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட கொள்கலன்களின் உரிமையாளர்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளே இந்த புகைப்படங்களில் உள்ளனர். இவற்றின் ஊடாக போதைப்பொருள் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டிருந்தால் முழு நாடும் சீரழிவதற்கு அது வழிவகுத்திருக்கும்.

போதைப்பொருள்கடத்தல்காரர்கள்,அவர்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள், பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடையவர்களை இனங்காண்பதற்கு சிறந்த சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. துப்பாக்கிச்சூடுகள் இடம்பெறும் அந்த சந்தர்ப்பத்தில் சந்தேகநபர்களை கைது செய்ய முடியாவிட்டாலும், அதன் பின்னர் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் ஊடாக பெரும்பாலான சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் திணைக்களமும் இராணுவமும் இணைந்து முன்னெடுக்கும் இந்த சுற்றிவளைப்புக்களின் மூலம் பல குற்றங்கள் இடம்பெறமுன்னரே அவற்றைதடுக்க முடிந்துள்ளது. அரசுத் தலைவர்யும் இதனை கடுமையாக வலியுறுத்திக் குறிப்பிட்டிருந்தார். கொழும்பு மாவட்டத்தில் போதைப்பொருள் தொடர்பான கலந்துரையாடல்கள் பிரதமர் தலைமையில் பிரத்தியேகமாக இடம்பெற்று வருகின்றன. மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்துக்கு அப்பால் அந்த கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

போதைப்பொருள்ஒழிப்புநடவடிக்கைளின்போது முதலில் விநியோக சங்கிலி இல்லாதொழிக்கப்பட வேண்டும். முப்படையினர் பொலிஸார் இணைந்து அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். அந்த வகையில் போதைப்பொருள் தயாரிப்புக்கு தேவையான இரசாயன மூலப்பொருள் அடங்கிய கொள்கலன்கள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றின் உரிமையாளர்களுடன் உள்ள சில அரசியல்வாதிகளின் புகைப்படங்களும் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கமைய தராதரமின்றி அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர். விசாரணைகளுக்காக சிலரைத் தேடும் போது அவர்கள் பட்டப்படிப்பிற்காக சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சிலர் சுகயீனமுற்று வெளிநாடுகளுக்கு சிகிச்சைக்காக சென்றுள்ளதாகவும் கூறப்படுகிறது. யார் எங்கிருந்தாலும் சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்படும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com







### ஜெனிவா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் ஆளும்தரப்பு நிலைப்பாட்டையும், தாம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளையும் தெளிவுபடுத்திப் பதிலளிப்பார்.

இதுஇவ்வாறிருக்கஇம்முறைஇலங்கை தொடர்பில் பிரிட்டன் தலைமையிலான உறுப்புநாடுகளினால் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளபுதியபிரேரணைகுறித்த உத்தியோகபூர்வமற்றகலந்துரையாடல்கள் இம்மாதம் 15 ஆம் திகதியின் பின்னர் ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ளன.

### ஷஷீந்திர.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்பட்டதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் ஜகத் வீரசிங்க தெரிவித்தார்.

உயர் இரத்த அழுத்தம் உள்ளிட்ட நோய் நிலைமை காரணமாக அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான காணியில்அனுமதியின்றிநிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் உள்ளிட்ட சொத்துக்கள் போராட்டத்தின் போது சேதமாக்கப்பட்டதாக தெரிவித்து 88 இலட்சம் ரூபாவிற்கு மேல் நட்டஈடு பெற்றமை தொடர்பாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஷஷீந்திர ராஜபக்ச இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

சஷீந்தர ராஜபக்ச மீது பொதுச் சொத்து துஷ்பிரயோக சட்டம் மற்றும் ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனித்தனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


Study MBBS in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION OPEN
CONTACT US FOR ADMISSION
0701348384

காலைக்கதிர் Kalaikkathir

# சுற்றுலாப் பேருந்துகளை கண்காணிக்க இதுவரை எந்த விதிமுறைகளும் இல்லை

## பிரதி அமைச்சர் தெரிவிப்பு

பதுளை, எல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எல்ல - வெல்லவாய பிரதான வீதியில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற கோர விபத்தில் சிக்கிய பேருந்து, 2023இல் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் பதிவு நீக்கம் செய்யப்பட்டிருந்ததாக போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

சுற்றுலாக்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் பேருந்துகளைக் கண்காணிக்க இதுவரை எந்த விதிமுறைகளும் அறிமுகப்படுத்தப்படவில்லை என்றும், இருப்பினும், குறித்த வீதியில் விபத்துகளைக் குறைக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபை அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

தனியார் பேருந்துகளில் மாகாணத்துக்குள் மாத்திரம் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்துகள் உள்ளன. அந்த பேருந்துகள் மாகாண போக்குவரத்து அதிகாரசபையிலேயே பதிவு செய்யப்படும். மாகாணங்களுக்கிடையில் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்துகள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டு வழித்தட அனுமதியைப் பெற வேண்டும்.

குறித்த விபத்துக்குள்ளான பேருந்து 2023இல் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிலிருந்து பதிவு நீக்கப்பட்டுள்ளது. அதற்கு பதிலாக வேறு பேருந்தொன்றே பதிவு செய்யப்பட்டுள்ளது. இது பழைய பேருந்து என்பதால் வீட்டில் வைத்திருந்து, அதைப் புதுப்பித்து சுற்றுலா செல்வதற்கு மாத்திரம் பயன்படுத்தியிருக்கின்றனர்.

அந்த வகையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்த பேருந்து விதிமுறைகளுக்கு உட்படவில்லை. வருடாந்தம் வாகன அனுமதி பத்திரத்தை புதுப்பிப்பதற்கு மாத்திரமே இந்த சென்றிருக்க வாய்ப்புள்ளது. எவ்வாறிருப்பினும் இவ்வாறு வாகன அனுமதி பத்திரம் வழங்கப்படும் போதும் அதன் நிலைமை ஆராயப்பட்டிருக்கவில்லை.' என்றார்.

இந்நிலையில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தைச் சேர்ந்த குழு, பேருந்தைப் பார்வையிட விபத்து நடந்த இடத்திற்குச் சென்றுள்ளது. மேலும், தேசிய போக்குவரத்து இரசாயன பகுப்பாய்வு நிறுவனம் மற்றும் போக்குவரத்து அமைச்சின் வீதி பாதுகாப்பு திட்டத்தின் அதிகாரிகள் குழுவொன்று நேற்று சனிக்கிழமை அப்பகுதியில் மேலதிக ஆய்வுகளை நடத்தி உள்ளனர்.

### தங்காலையில் அஞ்சலி

தங்காலையிலிருந்து நுவரெலியாவுக்கு சுற்றுலா சென்று திரும்பிக் கொண்டிருந்த போது விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களில் 12 பேர் தங்காலை நகரசபையில் பணிபுரிபவர்களாவர். இவ்வாறு உயிரிழந்தவர்களில் தங்காலை நகரசபை செயலாளரும் உள்ளடங்குகின்றார்.

இவர்களில் 10 பேரின் சடலங்கள் நேற்று தங்காலை நகரசபை மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன. உயிரிழந்தவர்களின் உறவினர்களின் அழுகுரல்களுக்கு மத்தியில் நூற்றுக்கான மக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக தங்காலை நகரசபையில் திரண்டிருந்தனர்.

### பிரதமரும் நேரில் சென்று அஞ்சலி

பிரதமர் ஹரிணி அமரசூரியவும் தங்காலை நகரசபைக்குச் சென்று உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தியதோடு, அவர்களின் உறவினர்களுக்கும் ஆறுதல் கூறினார். பிரதமருடன் மேலும் சில அரசியல்வாதிகளும் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தியதோடு அவர்களுக்கான இறுதி மத சடங்குகளிலும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட பிரதமர் ஹரிணி அமரசூரிய, 'இந்த விபத்தால் முழு நாடும் சோகத்திலுள்ளது. இவ்வாறான சம்பவங்கள் மீண்டுமொருமுறை இடம்பெற இடமளிக்கமுடியாது. இவை தற்செயலாக இடம்பெறுபவை அல்ல. தவிர்க்கக் கூடியவை. எம்மால் சட்டத்தை உருவாக்க முடியும். ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்தும் போது அதற்கு ஒவ்வொருவரதும் ஒத்துழைப்பு அவசியமாகும்.' என்றார்.

### காயமடைந்தோர் வைத்தியசாலைகளில்

விபத்தில் காயமடைந்த 17 பேர் மற்றும் அவர்களை மீட்கும் பணிகளில் ஈடுபட்ட போது காயமடைந்த மேலும் இருவர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இது தொடர்பில் பதுளை வைத்தியசாலை வைத்தியர் பாலித ராஜபக்ச தெரிவிக்கையில், 'காயமடைந்தவர்களில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டியவர்களுக்கு அவை முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளன. சிலருக்கு முக்கிய சத்திர சிகிச்சைகள் சற்றுக் காலம் தாழ்த்தப்பட்டுள்ளன. ஏனைய காயங்கள் ஆறும் வரை அவற்றை மேற்கொள்ள முடியாது. எனினும் அவர்களது உடல் நலன் நாளுக்கு நாள் சரியாகி வருகின்றன. சிலர் ஓரிரு நாட்களில் வீடுகளுக்கு செல்லக் கூடிய நிலைமையிலுள்ளனர். இவர்களுக்கு விபத்து இடம்பெற்ற இடத்திலேயே முதலுதவி அளிக்கப்பட்டமையால் உயிர் ஆபத்து ஏற்படாமல் தடுக்க முடிந்துள்ளது.

### இரசாயன பரிசோதனை

துண்டுகளாக சிதைந்திருந்த பேருந்து நேற்று சனிக்கிழமை அதிகாலை மேலெடுக்கப்பட்டு எல்ல பொலிஸ் நிலையத்துக் கொண்டு வரப்பட்டது. அவை நாளை திங்கட்கிழமை அரச இரசாயன பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பேருந்தில் இயந்திர கோளாறு

விபத்து குறித்த ஆரம்பகட்ட விசாரணைகளில் பேருந்தில் இயந்திரக் கோளாறு இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சர் எஃப்.யு. வூட்லர் தெரிவித்துள்ளார்.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தைச் சேர்ந்த நிபுணர் ஒருவர் விபத்துக்குள்ளான பேருந்தை ஆய்வு செய்து, கண்டறிதலை உறுதிப்படுத்தும் அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். எனினும், விபத்துக்கான சரியான காரணத்தை கண்டறிய மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# பொலிஸாரின் தேடுதலில் சிக்கியது ஐஸ் போதைக்கான மூலப்பொருள்தான்

## பரிசோதனைகள் உறுதிப்படுத்தின

மித்தெனிய பிரதேசத்தில் மீட்கப்பட்ட கெஹெல்பத்தர பத்மேவுக்கு சொந்தமானது எனக்கூறப்படும் ஐஸ் போதைப்பொருள் தயாரிப்புக்காக பயன்படுத்தப்படும் 42 ஆயிரம் கிலோ இராசயன பதார்த்தங்களில் ஐஸ் மற்றும் பெத்தபெட்டமைன் போதைப் பொருட்களின் மூலக்கூறுகள் காணப்பட்டமை இரசாயன பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாகச் சந்தேகத்தின் அடிப்படையில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டு அவர் மேலதிக விசாரணைகளுக்காக மேல்மாகாண வடக்கு குற்றத்தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உதயகுமார வுட்லர் தெரிவித்தார்.

திட்டமிட்டக்குற்றச்செயல்களுடன் தொடர்புடையதாக கூறப்படும் கெஹெல்பத்தர பத்மே பெக்கோ சமன் கொமாண்டோ சலிந்து உள்ளிட்ட ஐவர் இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்டு அண்மையில் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

இந்நிலையில் அவர்கள் மேலதிக விசாரணைக்காக குற்றப்புலனாய்வு திணைக்களம் மற்றும் மேல்மாகாண வடக்கு குற்றத்தடுப்பு பிரிவில் விசேட தடுப்பு காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

இதற்கமைய கேஹெல்பத்தர பத்மே நுவரெலியா பிரதேசத்தில் உள்ள வீடொன்றை வாடகைக்குப் பெற்று ஐஸ் போதைப்பொருளை தயாரிப்புக்காக பாகிஸ்தானிகர்கள் இருவரை நாட்டுக்கு அழைத்து வந்துள்ளமை ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது வெளிக்கொணரப்பட்டிருந்தது.

மேல்மாகாண வடக்கு குற்றத்தடுப்பு பிரிவில் விசேட தடுப்பு காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள பெகோ சமனிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது அதனை உறுதிப்படுத்த பொலிஸாரால் முடிந்தது.

இந்நிலையில் பெக்கோ சமன் மற்றும் தெம்பிலி லஹிரு ஆகியோரை விசாரணை அதிகாரிகள் மித்தெனிய பிரதேசத்துக்கு அழைத்து சென்று விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். எனினும் இதன்போது எந்தவித தகவல்களும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

இந்த பின்னணியில் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் போது கெஹெல்பத்தர பத்மேவுக்கு பாகிஸ்தானியர் ஒருவரின் உதவியுடன் இரு கொள்கலன்கள் மூலம் ஐஸ் போதைப்பொருள் தயாரிப்புக்கு பயன்படுத்தப்படும் ஒருவகை இரசாயன பதார்த்தம் கொண்டு வரப்பட்டுள்ளமை வெளிக்கொணரப்பட்டுள்ளது.

மேல் மாகாண வடக்கு பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவுக்கு பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரோஹான் ஒலுகல மற்றும் அதன் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் லிட்டன் சில்வா உள்ளிட்ட அதிகாரிகள் நேற்றுமுன்தினம் மித்தெனிய தலஹா பிரதேசத்தில் உள்ள இடமொன்றை சோதனைக்கு உட்படுத்தியிருந்தனர்.

இதன்போது அப்பகுதியில் இரு கொள்கலன்களில் புதைக்கப்பட்டிருந்த ஐஸ் போதைப்பொருள் தயாரிப்புக்கு பயன்படுத்தப்படும் இரசாயன பதார்த்தம் மீட்கப்பட்டது.

குறித்த இரசாயன பதார்த்தங்களை பெக்கோ சமன் தனது நண்பர்களான பொதுஜன பெரமுனவின் அங்குணகொலபெலஸ்ஸ பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் மற்றும் அக்கட்சியின் சார்பில் கடந்த முறை போட்டியிட்ட உறுப்பினருக்கு சொந்தமான இடத்தில் மறைத்து வைத்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன் குறித்த இருவரும் சகோதரர்களாவர். சந்தேகநபர்கள் இருவரும் குறித்த இரசாயன பதார்த்தை பிறிதொரு இடத்தில் இருந்து அப்பகுதிக்கு கொண்டு வந்து இவ்வாறு புதைத்துள்ளனர்.

எவ்வாறாயினும் குறித்த பகுதியை நேற்றுமுன்தினம் சந்தேகநபர்கள் கொங்கிரிட் இட்டு முழுமையாக மூடுவதற்கு தயார் நிலையில் இருந்தாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் அங்கிருந்து ஐஸ் போதைப்பொருள் தயாரிப்புக்காக பயன்படுத்தப்படும் 42 ஆயிரம் கிலோ இராசயன பதார்த்தங்களில் ஐஸ் மற்றும் பெத்தபெட்டமைன் போதைப்பொருட்களின் மூலக்கூறுகள் காணப்பட்டமை இரசாயன பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் அடிப்படையில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டு அவர் மேலதிக விசாரணைகளுக்காக மேல்மாகாண வடக்கு குற்றத்தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உதயகுமார வுட்லர் தெரிவித்தார்.

# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

# JRIDE

இலங்கையின் பயணிகள் செயலி

SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA








5%

இப்போது நாம்
இலங்கை முழுவதும்

காத்திருப்புக்கு விடுதலை!

www.jride.lk

மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.08.2025இல் வெளியிடப்பெற்றது